TAMIL NADU LEGISLATIVE LIBRARY
3 - DEC 1981
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1981, பிப்ரவரி 28.

மாசி 17—ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மை குடிக்கு''

நல்ல குடி மக்களுக்கு, முகமலர்ச்சி, உதவும் இயல்பு இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர்.

I. ஒழுங்குப் பிரச்சினை

பட்டியலில் சேர்க்கப் பெற்று எடுத்து கொள்ளப் பெறாத வினாக்கள்.

திரு. ப. நெடுமாறன் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நேற்றைய தினம் விடப்பட்ட கேள்விகள் இன்றைய பட்டியலில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் இருக்காது. அந்த அமைச்சர் வரும்போதுதான் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகளை ஒத்திவைப்பது சம்பந்தமாகச் சொன்னீர்கள், அந்தந்த அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நாளில்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று. இது குறித்து பாராளுமன்றத்தின் விதியை உங்களுக்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

It is stated in ''Practice and Procedure of Parliament'' as follows :

After a question is placed on the printed list of questions for a day, the right to ask for postponement is conceded to the Member concerned.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளைப் பொறுத்த வரையிலும் பாராளுமன்ற முறையிலேயும் சட்டமன்ற முறையிலேயும் சில மாறுதல்கள் உள்ளன. நீங்கள் அதை ஒப்பிட்டுப் பேசினால் சரியாக இருக்காது.

[1981 பிப்ரவரி 28

திரு. ரா. உமாநாத்: விதிகள் எப்படி இருந்தாலும், கன்வென்ஷன் பிரகாரம் போகவேண்டும். சமீபத்தில் கூட தாங்கள் பாராளுமன்ற புரொசிஜர்படி நடக்க வேண்டும் என்று ரூலிங் கொடுத்ததாக நினைக்கிறேன்.

The right to ask for postponement is conceded to the Member concerned and not to the Minister who is to answer the question. He is bound to answer once it is placed on the list. In exceptional cases, some specific questions which the Prime Minister desires to be postponed to be answered by him personally have been postponed under orders of the Speaker. எக்சப்ஷனல், அதுவும் பிரைம் மினிஸ்டர். ஆனால் இங்கே சர்வ சாதாரணமாக அமைச்சர் கேட்டார் என்று சொல்லி ஒத்தி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாடாளுமன்ற முறை என்ன என்பது உங்களுக்கும் தெரியும். ஒரு மணி நேரம் முடிந்த பிறகு மீதி இருக்கின்ற அத்தனை கேள்விகளுக்கும் விடை அச்சடித்து வைக்கப்படும். ஆனால் இங்கே நாம் எல்லா கேள்விகளுக்கும் முடிந்த அளவில் அமைச்சர்கள் நேரடியாகப் பதில் சொல்ல வேண்டும் என்ற முறையை வைத்திருக்கிறோம். மேலும் இந்தக் கேள்விகள் அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) நீண்ட நாள் ஒத்திவைப்பதாக இல்லை. நாளையோ அல்லது மறுதினமோ இது வரும். மேலும் நமது விதி ''உரிய அமைச்சரது வேண்டுகோளின் பேரில் ஒரு நாளின் வினாப்பட்டியலில் சேர்க்கப்பெற்ற வினா அல்லது வினாக்களை பேரவைத் தலைவர் வேறொரு நாளுக்கு ஒத்திவைக்கலாம்'' என்று பாதுகாப்பாக இருக்கிறது.

திரு என். எஸ். வி. சித்தன்: அதை அடிக்கடி பிரயோகிக்க வேண்டாம். மேலும், இந்த வினாக்களை வைக்கிற நேரத்தில் அது என்றைக்கு வருகிறது என்று சொல்லிவிட்டால் உறுப்பினர்கள் அன்றைக்கு இருப்பதற்கு வசதியாக இருக்கும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, இந்த கேள்வி மிகவும் முக்கியமான கேள்வி. இதனுடைய பின்னணி உங்களுக்கும் தெரியும். இதைக் குறுகிய கால வினாவாக கொடுக்க அமைச்சரிடத்தில் சொன்னபோது 10 நாட்களுக்குள் விடை கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினாவாகக் கொடுத்தால் அமைச்சரவையில் இருந்து பதில் வந்த உடன் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

1981 பிப்ரவரி 28]

திரு. எல். இளையபெருமாள் : நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது ஒரு குறுகிய கால வினா கேட்டு இருந்தேன். அது இதுவரையில் எடுத்துக்கொள்ளப்பெற வில்லை. அந்தக் கேள்விக்கு முக்கியத்துவம் அளிக்காமல் விடப்பட்டு இருக்கிறது. 'ஷார்ட் நோட்டீஸ்' என்று கொடுத் தது. இப்போது 'லாங் நோட்டீஸ்' என்ற வகையில் மாறியும் வரவில்லையே, ஏன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மாதிரி கேள்விகள் இப்போது கேட்கக் கூடாது. கேள்வி நேரம் முடிந்தபின் கேட்கலாம்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காலை 9 மணிக்கு அவை ஆரம்பிக்கின்றபோது, முதன்முதலாகத் தலைவர் அவர்களால் கூறப்படுகிற நல்ல குறள்கள் அவைக் குறிப்பில் இடம் பெறுகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே பேசுகிற அல்லது சொல்லப்படுகிற அத்தனையும் அவைக்குறிப்பில் இடம் பெறும். இப்போது தாங்கள் கேட்பது உட்பட அவைக்குறிப்பில் இடம் பெறும்.

2. வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நம்புதாளையில் இரால் வளர்ப்புப் பண்ணை.

வினா எண். 301—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

'திருவாடனைத் தொகுதியில் உள்ள நம்புதாளையில் இரால் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் தற்போது எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 'திரு வாடனைத் தொகுதியில் உள்ள நம்புதாளையில் இரால் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை'.